யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001

தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com

Website:www.bankubeutn.in

சுற்றறிக்கை எண்:148:2017 நாள்: 30.11.2017

அன்பார்ந்த தோழர்களே,

சங்கத்தின் செயற்குழுக் கூட்டம்

நமது சங்கத்தின் 22வது மாநாடு கடந்த செப்டம்பர் 9-10 தேதிகளில் மதுரையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அதன் பின், கடந்த அக்டோபர் 8ஆம் நாள் நிர்வாகக் குழுக் கூட்டம் மதுரையில் சிறப்பாக நடைபெற்றது. இந்தக் காலகட்டத்திற்கான முதல் செயற்குழுக் கூட்டம் கடந்த நவம்பர் 25ஆம் நாள் சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 11வது இருதரப்பு பேச்சுவார்த்தை, வங்கிகள் இணைப்பு, வங்கிகளிலுள்ள வாராக்கடன்கள், யூனியன் வங்கியின் நிதிநிலை, வங்கிகள் குறித்த மும்பை கருத்தரங்கு, பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, ஓய்வூதியம், ஊழியர் நல நிதி, அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கத்தின் மாநாடு ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. கடந்த மாநாடு முதல், இந்தக்கூட்டம் வரை நடைபெற்ற நிகழ்வுகளை உள்ளடக்கிய ஆவனத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பொதுச்செயலாளர் விரிவாக விளக்கமளித்தார்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர்.**E.அருணாச்சலம்** அவர்கள் செயற்குழுவைத் துவக்கிவைத்து வாழ்த்துரை வழங்கினார். அவர் தற்பொதுள்ள அரசியல் சூழல், வங்கிகளுக்கு மூலதனம் வழங்குவதற்கான தேவை, வசதி இருந்தும் திருப்பிச்செலுத்தாத வாராக்கடன்-தாரர்கள் மீது எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து விரிவாக உரையாற்றினார்.

அகில இந்திய யூனியன் வங்கி அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர்.D.S.கணேசன் அவர்கள் சிறப்புரையாற்றினார். 11வது இருதரப்பு ஊதிய உயர்வுப் பேச்சுவார்த்தைகள், யூனியன் வங்கியின் நிதிநிலை, அதிகாரிகள்-ஊழியர்கள் ஒற்றுமை ஆகியவை குறித்து விரிவாக உரையாற்றினார்.

புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும், பிற தோழர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் தங்களது முழுமையான பங்களிப்பை சங்க வளர்ச்சிக்கு வழங்க உறுதியளித்தனர்.

சங்கத்தின் 22வது மாநாட்டின் கணக்குகளை, வரவேற்புக்குழுவின் பொருளாளர் தோழர்.**B.ஜெயகுமார்** அவர்கள் சமர்ப்பித்தார். செயற்குழு கணக்குகளை ஒருமனதாக ஏற்றுக்கொண்டது.

மாநாட்டை சிறப்பாக நடத்தியமைக்காக வரவேற்புக்குழுவிற்கு செயற்குழு தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டது. மாநாடு சிறக்க, நிதி ஆதாரத்தை திரட்டிக்கொடுத்த அனைத்து தோழர்களுக்கும் செயற்குழு தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டது. விளம்பரங்களை உடனடியாக சங்க அலுவலகத்திற்கு அனுப்பினால், விரைவில் சிறப்பு மலர் வெளியிட உதவியாக இருக்கும்.

கடந்த நிர்வாகக்குழுவில் நிரப்பப்படாமல் விடுபட்ட இரண்டு செயற்குழு உறுப்பினர் பதவிகளுக்கு, விரிவான விவாதத்திற்கு பின், கீழ்க்கண்ட தோழர்கள் ஒருமனதாக தேர்வுசெய்யப்பட்டனர்:

1. தோழர்.**J.கோதண்டபாணி**, வேலூர் கிளை
2. தோழர்.**S.பரந்தாமன்**, கொனவட்டம் கிளை

புதிதாக தேர்வு செய்யப்பட்ட தோழர்களுக்கு, நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சங்கத்தின் சொத்துக்களை நிர்வகிக்க கீழ்க்கண்ட தோழர்கள் அடங்கிய ஒரு உப-குழுவை செயற்குழு நியமித்தது:

1. தோழர்.**M.கார்த்திகேயன்**, துணைத்தலைவர்
2. தோழர்.**N.பாலசுப்பிரமணியன்**, பொருளாளர்
3. தோழர்.**E.நாகேந்திரன்**, செயலாளர்
4. தோழர்.**S.சுரேஷ்**, துணைப் பொருளாளர்
5. தோழர்.**V.வெற்றிவேல்**, துணைச் செயலாளர்

இக்குழு, நமது சங்கத்தின் சொத்துக்களை பராமரித்து, நிர்வகித்து வரும். இனி வரும் காலகட்டத்தில், ஒவ்வொரு செயற்குழுக் கூட்டத்திலும் அக்குழு ஒரு அறிக்கையை அளிக்கும்.

அகில இந்திய மாநாடு, சங்கத்தின் 45 ஆண்டு நிறைவு, சங்கத் தலைவரின் வங்கிப் பணி நிறைவு, தொழிற்சங்கப் பயிலரங்கு, இளைஞர் மாநாடு ஆகியவை குறித்தும் சங்கத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வது குறித்தும் செயற்குழு விரிவாக விவாதித்து முடிவுகளை எடுத்துள்ளது.

தோழமை வாழ்த்துக்களுடன்,

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்